பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

03 12 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புயல் மற்றும் நிலச்சரிவு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக் கூறியுள்ளார்.

3. மோசடி அழைப்புகளைக் கண்டறியும் வகையில் மொபைல் ஃபோன்களில் சஞ்சார் சாத்தி செயலியை முன்கூட்டியே நிறுவுவதற்கான வழிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

4. நாடு முழுவதிலும் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளின் புழக்கம் வெகுவாக குறைந்துள்ளது என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

5. குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

புயல் மற்றும் நிலச்சரிவு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

இலங்கை அதிபர் திரு அனுர குமார திசாநாயக்கவுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஆபரேஷன் சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று பிரதமர் உறுதிப்பட தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபாத் யெஸ்ஸோ நாயக் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றிற்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரை நாட்டின் மொத்த மின் உற்பத்தி திறன் 5.05 லட்சம் மெகாவாட்டை எட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

2030 - ம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிசக்தி உற்பத்தித் திறனை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தானியங்கி மின்வழித்தடத் திட்டத்திற்கு 100 சதவீதம் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் குடிமைப் பணி அதிகாரிகளின் சிறந்த சேவையை அங்கீகரிக்கும் நோக்கில் இந்த ஆண்டிற்கான பிரதமரின் விருதுக்காக 2,035 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விருது அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 21- ம்

தேதி புதுதில்லியில் குடிமைப் பணி தினத்தையொட்டி நடைபெறும் விழாவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதில் ஒரு கோப்பை, சான்றிதழ் மற்றும் 20 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை ஆகியவை அடங்கும்.

<<<<>>>>

நடப்பாண்டு ரபி பருவத்தில் நாடு முழுவதும் 393 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர்களுக்கான விதைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 87 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பருப்பு வகைகள் பயிரிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2 லட்சம் ஹெக்டேர் பரப்பளவு கூடுதலாகும்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வசூல் நவம்பர் மாதத்தில் 1.7 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 0.7 சதவீதம் கூடுதலாகும்.

இதில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி 34 ஆயிரத்து 843 கோடி ரூபாயாகவும், மாநில சரக்கு மற்றும் சேவை வரி 42 ஆயிரத்து 522 கோடி ரூபாயாகவும், ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி. வரி வருவாய் 92 ஆயிரத்து 910 கோடி ரூபாயாகவும் உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

மோசடி அழைப்புகளைக் கண்டறியும் வகையில் மொபைல் ஃபோன்களில் சஞ்சார் சாத்தி செயலியை முன்கூட்டியே நிறுவுவதற்கான வழிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய தொலைத்தொடர்புத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் பயன்படுத்துவதற்காக தயாரிக்கப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் அனைத்து மொபைல் சாதனங்களிலும் சஞ்சார் சாத்தி மொபைல் செயலி முன்கூட்டியே நிறுவப்பட்டிருப்பதை உறுதி செய்யுமாறு அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மொபைல் சாதனங்களில் முன்கூட்டியே நிறுவப்பட்டுள்ள சஞ்சார் சாத்தி செயலி அதன் பயனாளிகளுக்கு உடனடியாக அறிந்து கொள்ளும் விதமாகவும், எளிதில் பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெவிக்கப்பட்டுள்ளது.

மொபைல் சாதனங்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு இந்தியாவில் விற்பனையில் உள்ள சாதனங்களுக்கு மென்பொருள் புதுப்பிப்பு மூலம் அதனை மேம்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை 90 நாட்களுக்குள் செயல்பாட்டிற்குகே கொண்டு வர வேண்டும் என்றும், அது குறித்த அறிக்கையை 120 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் உற்பத்தியாளர்களை தொலைத்தொடர்புத் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் வசித்து வரும் பகுதிகளில் பல ஆண்டுகளாக மின்வசதி இல்லாத சூழலில் பிரதமரின் ஜன்மன் திட்டத்தின்கீழ் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இது பழங்குடியின மக்களிடையே பெரிதும் வரவேற்பைப் பெற்றுள்ளதாக ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்தார்.

(Voice Byte - Collector - 24 Sec)

<<<<>>>>

நாடு முழுவதிலும் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளின் புழக்கம் வெகுவாக குறைந்துள்ளது என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2023ஆம் ஆண்டு இந்த ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்ததையடுத்து, புழக்கத்தில் இருந்த மூன்றரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான

ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியின் 19 அலுவலகங்களில் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை மாற்ற விரும்புவோர் அஞ்சல் வழியாக அவற்றை அனுப்பலாம் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

வரைவு அஞ்சலக திருத்தச் சட்டம், 2023 குறித்து மக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், பயனாளிகளை மையமாகக் கொண்ட நவீன, பாதுகாப்பான டிஜிட்டல் பரிவர்த்தனைகளுடன் கூடிய செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வகையில் இச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவுத் திருத்தச் சட்டம் குறித்த தங்களது ஆலோசனைகளை மின்னஞ்சல் வாயிலாக இம்மாதம் 31-ம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி பேகம் கலீதா ஜியா விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், திருமதி பேகம் கலீதா ஜியா- வின் உடல்நிலை கவலையளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் பல ஆண்டுகளாக நாட்டின் பொதுச் சேவைக்காக தம்மை அர்ப்பணித்துள்ளார் என்றும், சாத்தியக்கூறு உள்ள அனைத்து ஆதரவையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

<<<<>>>>

நடப்பாண்டில், நெல் அறுவடை காலத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் பண்ணை சார்ந்த இடங்களில் தீ விபத்துகள் குறைந்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்த மாநிலங்களில் 53 சதவீத தீ விபத்துகள் மட்டுமே பதிவாகியுள்ளன என்றும், இது கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தீ விபத்துக்கள் என்றும் அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்று தர மேலாண்மை ஆணையம் அதன் செயல் திட்டங்களின்படி, குறிப்பிட்ட பயிர்க் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை தீவிரமாக கண்காணிக்கத் தொடங்கியதிலிருந்து தீ விபத்துக்கள் குறைந்துள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

அரசு நிலத்தை அதிகார துஷ்பிரயோகம் மூலம் அபகரித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனாவிற்கு டாக்கா நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கில் தொடர்புடைய அவரது சகோதரி ஷேக் ரெஹானா, அவரது மகள் மற்றும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் திரு துலிப் சித்திக் ஆகியோருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

<<<<>>>>

குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் ஆகர்ஷி காஷ்யப், தன்யா ஹேமந்த், தன்வீ ஷர்மா, சாய் பிரதீக், ருத்வீ கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

-------------

உலகக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - நமீபியாவை வென்றது.

சிலியின் சாண்டியாகோவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 13-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

---------------

சையத் முஷ்தாக் அலி கோப்பைக்கான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தமிழகம் இன்று கர்நாடகா அணியை எதிர்கொள்கிறது.

---------------

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஸ்விட்சர்லாந்தை எதிர்கொள்கிறது.

மதுரையில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>